Tamil Short Story – Third Prize

சௌந்தரராஜன் ஜீவா (Soundrarajan Jeeva)

# தனிமை (Lonesome)

ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. காலை மணி ஆறு. சுகுமாறன் கண்விழித்தான். தனக்கென்று பெரியதொரு அறை இருந்தாலும் அவன் எழுந்தது அவன் வீட்டு சோஃபாவிலிருந்து. முதல் நாளிரவு பார்த்துக்கொண்டிருந்த தொலைக்காட்சியை அடைக்காமல் அப்படியே கண்ணயர்ந்து தூங்கிவிட்டான். இப்போது எழுந்து அதை அடைத்துவிட்டு வெறிச்சோடி இருந்த தன் அறைக்குச் சென்றான். முகம் அலம்பிட்டு மெதுவோட்டம் ஓட கிளம்பினான். ஆதவன் இன்னும் வானம் காணவில்லை. கடந்த ஆறு மாதங்களாக சூரியன் அவனை உறக்கத்தில் கண்டதுமில்லை. அது உதயமாகும்போது சுகுமாறன் மெதுவோட்டம் ஓடிக்கொண்டிருப்பான். வழக்கமான அவனது பழக்கம் அன்றும் தொடங்கியது.

சிங்கப்பூர் குளிராக இருப்பது அரிது. ஆனால் காலையில் சூரியன் எழும் முன் இருக்கும் குளிர்நிலை மெதுவோட்டம் ஓடுவோர்க்கு பொருத்தமாக இருக்கும். அக்குளிரில் சுகுமாறன் தன் டி-சட்டை வியர்க்க வியர்க்க மூன்றாவது கிலோமீட்டரைக் கடந்துகொண்டிருந்தான். அவனோடு ஓடிக்கொண்டிருந்த வினோத், “சுகு, நா இப்படியே கிளம்பிடுறெ. நாளைக்கு பார்ப்பொ…Er…நாளைக்கொ அதே கேள்வியே கேட்பெ. Hope to get a positive answer from you…” என மூச்சிரைக்க கூறி ஓட்டப்பாதை பிரியும் சந்தியில் வலது புறமாக திரும்பி ஓடினான். சுகு அவன் ஓட்டத்தை தனியே நேராக தொடர்ந்தான்.

தன் வீட்டிலிருந்து சுமார் ஐந்நூறு மீட்டருக்கு முன் நிறுத்தி வீட்டை நோக்கி நடந்தான். மெதுவோட்டம் முடிந்ததும் இவ்வாறு சற்றுதூரம் நடப்பது உடலுக்கு நன்மை அளிக்கும். வியர்வை சொட்டச்சொட்ட கையில் உள்ள சிறுதுண்டை வைத்து அத்துளிகளைத் துடைத்துக்கொண்டு சுகு தன் வாசலை அடைந்தான். காலணி அடுக்கி வைத்த இடத்திலிருந்து சாவியை எடுத்து கதவைத் திறந்தான். வீடெங்கும் நிசப்தம் நிலவியது. ஆனால் அண்டை வீட்டார் திருமதி ஹசான் சமைக்கும் கோழி குழம்பின் மணம் அந்த நிசப்தத்தை விலக்கியது. புன்முறுவலுடன் மேசையில் உள்ள செய்தித்தாளை எடுத்து தரையில் அமர்ந்து முதல் பக்கம் பார்த்தான். முன்தினம் நடந்த தேசிய தின அணிவகுப்பு அவன்

நினைவுக்கு வந்தது. தன் மனைவி...அதாவது தற்போது அவனிடமிருந்து பிரிந்திருக்கும் அவன் மனைவி செல்வியுடன் இறுதியாக சென்ற கொண்டாட்டம் அது. இப்போது அவள்...

வியர்வை அடங்கியதும் தன் அறையில் உள்ள வானொலியை இயக்கிவிட்டு குளிக்கச் சென்றான். “தேடும் கண்பார்வை...” எனும் பாடல் ஒலி 96.8-இல் ஒலித்தது. அதை முணுமுணுத்துக்கொண்டே குளித்துவிட்டு வந்தான். உடைகளை மாற்றிவிட்டு என்ன பசியாறலாம் என யோசித்தான். கதவு மணி ஒலித்தது. அவன் முகத்தில் புன்முறுவல் பூத்தது. வந்திருப்பது யாரென்று அவனுக்குத் தெரியும். வாசலில் திருமதி ஹசான். “சுகு...Have some chicken curry. Hope you like it. Yesterday’s curry. *Lagi* best!” என்று சிரித்துக்கொண்டே எந்த பதிலையும் எதிர்ப்பார்க்காமல் திருமதி ஹசான் சென்றார். சுகு கையில் பானையுடன் சில வினாடிகள் அங்கேயே நின்றான். நேற்று கொடுத்த மீன் குழம்பே இன்னும் இருக்கிறது. இதை எப்போது சாப்பிடுவது என எண்ணி அதை மேசையில் வைத்தான். நேற்று கொடுத்த மீன் குழம்பை எடுத்து சுட வைத்து அதில் ரொட்டி தொட்டு உண்டான். அப்படியே செய்தித்தாளில் உள்ள மற்ற முக்கிய செய்திகளையும் படித்தான். கைதொலைபேசி குறுஞ்செய்தி மணி ஒலித்தது. “Had a good run bro. Thanks again. Want to meet for coffee later?” என வினோத்தின் குறுஞ்செய்திக்கு “☺” என பதிலளித்தான் சுகு. அவன் எதிர்ப்பார்த்தது வேறொரு குறிஞ்செய்தி. கடந்த ஆறு மாதங்களாக காத்துக்கொண்டிருக்கும் அந்தக் குறுஞ்செய்தி செல்வியிடமிருந்து. செல்வி வீட்டைவிட்டுச் சென்று ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. அதற்குக் காரணம்...

“உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்...”...பி சுசிலாவின் இனிய குரலில் அமுதகானம் அவன் அறையிலிருந்து கேட்டது. செல்வியின் அமுத குரல் அவன் நினைவினுள் புகுந்தது. இது ஒன்றும் அவனுக்குப் புதிதல்ல அவன் அவளை நினைக்காத நாளில்லை. பார்ப்போர் பொறாமைகொள்ளும் அளவிற்கு மிக நெருக்கமாக இருந்தவர்கள் தான் செய்த ஒரு பிழையின் காரணத்தால் அவள் அவனைவிட்டு விலக நேர்ந்தது.

Tamil Short Story – Third Prize

சௌந்தரராஜன் ஜீவா (Soundrarajan Jeeva)

தனிமை (Lonesome)

சுகு எழுந்து வானொலியை அடைத்துவிட்டு தொலைக்காட்சிப் பார்க்கச் சென்றான். சென்ற வாரம் ஒளிபரப்பான வசந்தத்தின் நாடகங்களை இணையம் வழி தொலைக்காட்சியில் பார்த்தான். விளம்பாரம் இல்லாமல் பார்க்க இது ஒரு நல்ல உத்திதானே. நாடகங்களைப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே சுகுவின் நினைவு காலத்தைப் பின்னோக்கிச் சென்றது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன் தன் நண்பன் விமல் இயக்கிய மேடைநாடகத்திற்கு ஆதரவளிக்க அதைக் காணச் சென்றான். அதுதான் அவன் பார்க்கச்சென்ற முதல் மேடை நாடகம். அதுவே அவன் வாழ்க்கையின் அடுத்த பதினைந்து ஆண்டுகளைத் தீர்மானித்தது. அங்குதான் அவன் செல்வியை முதல் முதலில் பார்த்தான். செல்வி அந்நாடகத்தின் கதாநாயகி. ஆனால் அன்று முதல் அவன் வாழ்க்கை நாடகத்தில் அவளே கதாநாயகி...இன்றும் அவள்தான் கதாநாயகி.

அவனுடைய ஒரு காதல் செல்வியென்றால் மற்றொரு காதல் இசை. சுமார் நான்கு மாதங்களுக்கு முன் இவ்விரண்டையும் சேர்த்துவைக்கும் ஒரு பணியில் இறங்கினான். “இதயம்” எனும் பெயரில் ஒரு இசைவட்டை வெளியிட அவன் திட்டமிட்டான். அதற்கான முயற்சியிலும் அவன் இறங்கினான். இதுவரை ஆறு பாடல்களுக்கு இசையமைத்துள்ளான். உருவமில்லா அவனுடைய இசைக்கு உருவம் சேர்க்க அவன் நண்பன் குணால் உதவிக்கொண்டிருந்தான். மணி சுமார் ஒன்று. கதவு மணி ஒலித்தது. சுகு கதவைத் திறந்தான்.

“எப்படிடா...சரியா ஒன்னுனா ஒரு மணிக்கே வந்து நிக்கிறே?” என்றான் சுகு.

“எங்கப்பா அடிக்கடி சொல்லுவாரு. உன் நேரத்தெ வீணாக்குறதுக்கு மட்டும்தா உனக்கு உரிமெ இருக்கு. அடுத்தவங்க நேரத்தெ வீணாக்குற உரிமை உனக்கு இல்லென்னு” என்று காலணிகளை அவிழ்த்துக்கொண்டே சொன்னான் குணால்.

“உங்க அப்பாவுக்கு கோவில் கட்டணும்.” என்று கூறி சுகு அவனை உள்ளே அழைத்தான்.

“சரி. சாப்பிட என்ன இருக்கு?”

“ஒருத்தவங்க வீட்டுக்கு வரும்போது அங்க சாப்பாடு இருக்கும்னு நெனச்சி வரக்கூடாதுனு உங்க அப்பா சொல்லலெ?”

குணால் முறைத்தவாரே நாற்காலியில் அமர்ந்தான். சுகு அவனைப் பார்த்து சிரித்துவிட்டு திருமதி ஹசான் கொடுத்த கோழிக் குழம்பையும் ரொட்டியையும் எடுத்து அவன் முன் வைத்தான்.

“நண்பேன்டா!” என உரக்கக்கூறி அவற்றை ஒரு பிடிப்பிடித்தான் குணால்.

சுகு, “புது tune போட்டிருக்கெ. சாப்ட்டு தட்டெ கழுவி வெச்சுட்டு roomக்கு வா.” எனக் கூறி அறைக்குச் சென்றான்.

“வீட்டுக்கு வந்த விருந்தாளியையே தட்டெ கழுவி...”

“உங்க அப்பா ஒருத்தவங்க வீட்டுக்கு போனா...”

“சரி சரி சரி...கழுவி வெச்சிட்டு வரே...நண்பேன்டா!!” என்றான் குணால்.

சுகு புன்முறுவலுடன் தன் இசைக்கூடத்திற்குச் சென்றான். குணால் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதே சுகு அமைத்த இசையைக் கேட்டான். அவன் முகத்தில் பூரிப்பு ஏற்பட்டது. எந்த ஓர் இசை பின்னணியும் இல்லாமல் இவ்வளவு இதமான இசையை எப்படி இவனால் அமைக்க முடிகிறது என எண்ணி பல சமயம் வியந்துள்ளான். ஆனால் அதற்குக் காரணம் செல்வியின் நினைவுகள் என்றும் அவனுக்குத் தெரியும். இந்த காதல்தான் எவ்வளவு மகத்துவமானது. ஆக்கத்திற்கும் அது உறுதுணையாயிருக்கும், அழிவுக்கும் அது வழிவகுக்கும். சுகுவின் கலைப்படைப்பில் தனக்கும் ஒரு பங்கு உண்டு என எண்ணி குணால் மகிழ்ந்தான். நண்பனின் கட்டளையைத் தட்டாமல் தட்டுகளைக் கழுவிவிட்டு ஆடையின்றி இருந்த சுகுவின் இசைக்குப் புத்தாடை சேர்க்க ஒரு தாளுடன் குணால் அமர்ந்தான்.

அவன் அமைத்திருந்த இசை சோகமாக இருப்போர்க்குச் சோகமாகவும் மகிழ்ச்சியாக இருப்போர்க்கு மகிழ்ச்சியான இசை எனவும் தோன்றும். முரண்பட்ட இரு உணர்வுகளைக்

கொண்டிருப்பதால் சொற்களைச் சேர்க்க சற்று கடினமாகவே இருந்தது. குணால் ஒன்று சொல்ல தன் மனதில் உள்ளது அதுவல்ல எனக் கூறி சுகு அதை மறுத்தான். சுகு ஒன்று சொல்ல அது சரிவராது என குணால் மறுத்தான். இப்படியே சொற்போர் நடந்துகொண்டிருந்தது. சுமார் மூன்று மணி நேரத்திற்குப் பிறகு பாதி அலங்காரம் நடந்துவிட்டது. மூளைச்சோர்வால் இன்று இதோடு முடித்துக்கொள்வோம் என முடிவெடுத்து குணால் விடைப்பெற்றான்.

வாசலில் நின்றுகொண்டு, " செல்வி called?" என வினவினான் குணால்.

"அப்பாவெ கேட்டதா சொல்லு!" என பதிலளித்தான் சுகு.

முறைத்தபடியே குணா கிளம்பினான். முறைத்த முகம் சிரித்துவிட சில வினாடிகளே ஆயின. சுகு கதவை அடைத்தான். மீண்டும் எழுந்த நிசப்தமோ அவன் காதை அடைத்தது. ஆனால் இப்போது அதை விலக்க திருமதி ஹசானின் கோழி குழம்பின் மணம் வரவில்லை. செல்வி அங்கு இருந்தபோது அங்கு நடந்த இனிமையான நிகழ்வுகளே அவன் நினைவுக்கு வந்தன. அவன் நெஞ்சம் சற்று பாரமாகவே இருந்தது. கைத்தொலைபேசி குறுந்தகவல் மணி ஒலித்தது. மீண்டும் வினோத்.

"Coffee?"

"Not today bro. Might go out. Cheers!" என பதிலளித்து வினோத்தின் அழைப்பை மறுத்தான். தனியாகவே இருக்கும் அவன், கொஞ்ச நேரம் தனியாக இருக்க விரும்பினான். அவன் அமைத்த இசையோடு குணாலின் சொற்களையும் சேர்த்துப் பாடிப்பார்த்தான். அவன் பாடகன் அல்ல. ஆனால் ஆத்மார்த்தமாக பாடியதால் அதிலுள்ள அபசுவரத்தை ஓரளவு ஏற்றுக்கொள்ள முடிந்தது. நெஞ்சத்தின் பாரத்தைக் குறைக்க கண்களிலிருந்து ஒரு சில கண்ணீர்த் துளிகள் அப்பாரத்தோடு வெளிவந்தன. முழுமையாக குறையாவிட்டாலும் ஏதோ ஓரளவிற்கு அவன் நெஞ்சத்தில் வீசிய புயல் சற்றே ஓய்ந்தது. இசையால் ஆறாத நெஞ்சமும் உண்டோ.

சௌந்தரராஜன் ஜீவா (Soundrarajan Jeeva)

தனிமை (Lonesome)

சட்டென்று திரும்பினான். அவன் பார்வை அறையின் ஓரத்தில் இருந்த புகைப்படக் கருவியின் மேல் விழுந்தது. செல்வி அவனது முப்பத்தைந்தாவது பிறந்தநாளுக்கு வாங்கிக் கொடுத்தது. தன்னைப்போலவே அதுவும் பல நாட்களாகவே தனியாகவே இருந்திருக்கிறது. அதைக் கவனிக்காமலே விட்டிருந்தான். தற்செயலாக அவன் கண்களில் பட்டதால் அதற்கு வேலை கொடுக்க முற்பட்டான்.

சற்று நேரத்தில் அதை எடுத்துக்கொண்டு தன் வாகனத்தில் East Coastக்குக் கிளம்பினான். செல்லும் வழியில் அவன் கண்ட பல வாகனங்களில் பலரும் ஜோடிகளாக இருந்தனர். செல்வி தன்னுடன் இருந்த காலங்கள் மீண்டும் அவன் நினைவுக்கு வந்தன. ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது அவர்கள் சிங்கப்பூரின் கிழக்குக் கடற்கரைக்குச் செல்வார்கள். சுகு அவளை முதன்முதலில் அழைத்துச் சென்ற இடமும் அதுதான். முதல் மலர்க்கொத்து, முதல் மோதிரம், முதல் கைக்கடிகாரம், முதல் முத்தம் எல்லாம் அந்தக் கரையோரம் தனியே அமர்ந்திருக்கும் கூடாரத்திலே நிகழ்ந்தது. கடந்த ஆறு மாதங்களாக அவன் அவ்விடத்திற்குச் செல்லாமல் இருந்தான். கடந்த காலத்தை மீண்டும் வாழவோ என்னவோ தெரியவில்லை, அன்று அவன் அங்குச் செல்ல விழைந்தான்; தனியாக அல்ல, செல்வி வாங்கித்தந்த புகைப்படக் கருவியுடன். அப்போதும் அவள் அவனுடனே இருந்தாள்.

செல்வியுடன் அடிக்கடி வரும் இடத்திற்கு செல்லாமல் ஒரு வாகனபேட்டைக்கு முன்பே வாகனத்தை நிறுத்திவிட்டு ‘அவளையும்’ எடுத்துக்கொண்டு சுகு நடக்கலானான். வழியில் உள்ள செடிகள், அதில் உள்ள வண்டுகள், மலர்கள் அவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டும், ரசித்துக்கொண்டும், பற்பல கோணங்களில் படம் எடுத்துக்கொண்டும் நடந்தான். நடந்து சென்ற பாதை கடற்கரையை அடைந்தது. அன்று பொதுவிடுமுறையாக இருந்ததால் கடற்கரையே மக்கள் வெள்ளமாய் காட்சியளித்தது. எல்லா வயதினரும், எல்லா இனத்தவரும், பற்பல நாட்டினரும் அங்கிருந்தனர். குடும்பங்களாகவும் ஜோடிகளாகவும் எங்கும் குழுமி இருந்தனர். மெதுவோட்டம் ஓடுவோருங்கூட தனியாக ஓடவில்லை. அங்கு தனியாக இருந்தவன் அவன் மட்டுமே.

சௌந்தரராஜன் ஜீவா (Soundrarajan Jeeva)

தனிமை (Lonesome)

“சுகு! சுகு!” என்று யாரோ கூவும் குரல் கேட்டது. சுகு திரும்பிப் பார்த்தான். அவன் பாதங்கள் வேரூன்றி நின்றன. அது செல்வியின் அண்ணன், சுரேஷ்.

“இங்க எப்படி?” என்று சுரேஷ் கேட்டான்.

“அ... அது..சும்மாதா...படம் பிடிக்கலான்னு...”

“ஓ...தனியாவா?”

“அ...ஆமா...நீங்க இங்கே...”

அப்போது, “மாமா...!” என்று ஒரு சிறுமியின் குரல் அங்கிருந்த இரைச்சலைக் கிழித்துக்கொண்டு அவனுக்குக் கேட்டது. சுரேஷின் பின்னால் குமுதா சக்கரவண்டியை ஒற்றைக்காலால் ஊன்றி வந்துகொண்டிருந்தாள். குமுதா...சுரேஷின் ஆறு வயது மகள்.

“மாமா...! அத்தையெ பார்க்க வந்தீங்களா? அங்கே...”

“குமுதா!!! அம்மாகிட்டெ போ!!” என சுரேஷ் சற்று கடினமாக சொன்னான். குமுதாவின் முகம் மாறியது. அவள் சுகுவை அணுகி அவன் காலைக் கட்டி அணைத்து “Bye மாமா” எனக் கூறிக் கவலையுடன் சென்றாள்.

“Sorry சுகு. செல்வி வந்திருக்கா. எங்கே இருக்கான்னு தெரியலே. தனியா எங்கேயோ நடந்துபோனா. அப்புறோ வந்துடுவா. அவளெ பார்க்கப்போறியா?”

“இல்லெ இல்லெ...நா சும்மாதா வந்தெ. நீங்க இங்க இருப்பீங்கன்னே தெரியாது. Anyway வீட்டுலெ எல்லா சௌரியமா?” என்று கூறி உரையாடலைத் தொடர்ந்தான். வாய் மட்டும் உரையாடிக்

கொண்டிருந்ததே தவிர கண்களும் சிந்தனையும் செல்வியைத் தேடிக்கொண்டிருந்தன. எங்கிருந்தோ ஒரு மூளையிலிருந்து அவள் தோன்றமாட்டாளா என அவன் வேண்டினான்.

“வந்து அப்பா அம்மாவெ பார்த்துட்டு போயெ.”

“இல்லெ மச்சா...நா இப்போ கிளம்புறதாதா இருந்தெ. வீட்டுலெ கொஞ்சொ வேலெ இருக்கு. நா வரெ.”

“சுகு... அ...வந்து செல்வி அடிக்கலெதானே?”

சுகு அமைதியாகவே இருந்தான்.

“நானும் அவெகிட்டெ பேசிப் பார்த்துட்டே. ரொம்ப பிடிவாதமாவே...”

சுகு குறுக்கிட்டு, “It’s ok மச்சா. தப்பு என் மேலேதானே. It’s ok. Let’s see what happens. OK, நா கிளம்புறெ. அத்தெ மாமாவெ கேட்டதா சொல்லுங்கெ.”

“இல்லே சுகு. உன்னே பார்த்தேன்னு சொன்னா அவங்களுக்கு கொஞ்சொ கஷ்டமா இருக்கும்.”

சுகு சிரித்துக்கொண்டே, “இன்னேரம் குமுதா போய் அவங்கக்கிட்டெ சொல்லியிருப்பா. நா வரே மச்சா, “ என்றுரைத்து விடைப்பெற்றுத் திரும்பினான்.

திரும்பியதும் அவன் நெஞ்சம் கனத்தது. சுற்றி இருந்த இரைச்சல் காணாமல் போயின. அவ்விடத்தில் நூற்றுக்கணக்கானோர் இருந்தும் அவன் தன்னந்தனியாக இருப்பதுபோல் ஓர் உணர்வு. அந்த உணர்வு அவன் நெஞ்சத்தை இன்னும் கனக்க வைத்தது. எண்ணம் எதையோ தேடியது. எதையோ அல்ல, யாரையோ. “கொஞ்ச தூரம் நடப்போ, maybe செல்வியை பார்த்தாலும் பார்க்கலா”, என தனக்குள் எண்ணி நடந்தான். மறைந்துபோன இரைச்சல் மீண்டும் எழுந்தது. “ஆனா, அவளெ பார்த்தா என்ன சொல்ல? அவெ பார்த்தும் பார்க்காத மாதிரி போய்ட்டா?” என்று தன்னையே கேட்டுக்கொண்டான்.

இரைச்சல் மீண்டும் மறைந்தது. வீடு திரும்பிவிடுவோம் என தன் வாகனத்திற்கு நடந்தான், இப்போது அவளைப் பார்க்கக்கூடாதென்ற எண்ணத்தோடு. உறவில் விரிசல் கண்டவர்களின் மனநிலை வினாடிக்கு வினாடி மாறும் என்பது மாறாத ஒன்று.

ஒரு முறை அவர்களின் காதல் கூடாரத்திற்குச் சென்று வரலாமென அவன் ஆழ்மனம் கூறியது. அறிவு வேண்டாமென கூறியது. ஆனால் அவன் கைகளோ தன் மனம் சொன்னதைக் கேட்டு வாகனத்தை நேரே கிழக்குக் கரையின் கிழக்குக்கோடிக்கு இட்டுச் சென்றது. அவ்விடத்தை அடைந்ததும் வாகனத்தை நிறுத்திவிட்டு கரையை நோக்கி நடந்தான். கனத்திருந்த மனம் சற்று அமைதி அடைந்தது. செல்வியுடன் கழித்த அந்த பொன்னான நேரங்கள் அவன் கண்முன் நிழலாடின. தான் செய்தது அவ்வளவு பெரிய தவறல்ல. அறியாமல் செய்த தவறுதான். அதற்கு அவனிடம் ஆறு மாதங்களாக பேசாமல் இருப்பது மாபெரும் தண்டனையே. இருந்தாலும் அதை ஏற்றுக்கொண்டு அவனும் அவளைத் தொந்தரவு செய்யாமல் அவள் வழிக்கே விட்டிருந்தான். ஒருநாள் அவள் திரும்புவாள் என்ற நம்பிக்கையுடன். அந்த நம்பிக்கையும் அவளுடைய நினைவுகளுமே அவனுக்குத் துணையாக இத்தனை நாளாக இருந்துவந்தன. அவற்றிலேதான் அவன் ஆறுதலைக் கண்டான்.

எதிர்வரும் முச்சந்திப்பில் இடது புறம் திரும்பினால் அவனுக்குப் பழக்கமான அக்கூடாரம் அவன் கண்களுக்குத் தெரியும். திரும்பினான்... அப்போது அங்கிருந்த கூடாரம் மட்டும் அவன் கண்களுக்குத் தெரியவில்லை. மறையும் சூரியனின் மங்களான மஞ்சள்நிற ஒளி அவள் மீது படர, இளந்தென்றல் அவள் மெல்லிய மேனியை வருட, அத்தென்றலில் கட்டவிழ்த்துவிட்ட அவளது கருங்கூந்தல் அலையைப்பபோல் ஆட, நேரே இருக்கும் தொடுவானத்தை அவள் வேல்விழிகள் கூர்ந்து நோக்க, சுகுவின் பார்வை இவற்றையெல்லாம் நொடிப்பொழுதில் கண்டிட அங்கு அமர்ந்திருந்தாள் செல்வி.

அவள் வருவாளா, அவள் அழைப்பாளா, அவள் தொடர்புகொள்வாளா, தன் வீட்டுக் கதவைத் தட்டுவாளா என எத்தனையோ நாட்கள் அவளுக்காக காத்திருந்து, அவற்றில் ஏதேனும் நிகழ்ந்தால்

சௌந்தரராஜன் ஜீவா (Soundrarajan Jeeva)

தனிமை (Lonesome)

என்ன செய்வது, என்ன கூறுவது, எப்படி பதிலளிப்பது, என்ன சொல்லி வீட்டுக்குள் அழைப்பது என பல நாட்கள் தன் மனதுக்குள் ஒத்திகை பார்த்தான் சுகு. இப்போது அப்பதுமை நேரே அமர்ந்திருப்பதைக் கண்டதும் அனுபவமில்லாத மேடை நாடகக் கலைஞனொருவன் முதல் நாள் நிகழ்ச்சியில் தன் வசனத்தை மறந்து திருதிருவென விழிப்பது போல செயலற்று நின்றான். இந்த இதயம்தான் எவ்வளவு கொடுமையானது. சொல்ல மனதில் ஆயிரம் வார்த்தைகள் இருந்தும் இக்கொடூர இதயம் போடும் தாளம் அவற்றையெல்லாம் ஊமையாக்கிவிடுகிறதே!

ஏதோ ஒரு சிந்தனையிலிருந்த செல்வி பலத்த காற்று வீச அச்சிந்தனையிலிருந்து மீண்டாள். முகத்தை வருடிக்கொண்டிருந்த முடியை பின்னால் இழுத்துக் கட்டினாள். இதையெல்லாம் நின்ற இடத்திலேயே நின்று ரசித்துக்கொண்டிருந்த சுகு அடுத்து என்ன செய்யப்போகிறாள் என்று தெரிந்தும் அப்படியே நின்றான். செல்வி தன் பக்கத்தில் இருந்த கைத்தொலைபேசியையும் பணப்பையையும் எடுத்து நின்றாள். அப்போதுதான் சுகுவின் உலகம் மீண்டும் இயங்கியது. சட்டென்று திரும்பி விரைவாக நடந்தான். ஆனால், திரும்பும் முன் செல்வியின் மைவிழிகள் அவனை நோக்கியதுபோல் அவனுக்குத் தோன்றியது.

விறுவிறுவென வாகனத்தை நோக்கி நடந்தான். அவன் இதயத்துடிப்பு அவன் பாதங்களிடும் ஒலியைவிட சத்தமாக ஒலித்தது. அவள் பார்த்தாளா இல்லையா? பார்த்திருந்தால் என்ன ஆகும்? என்னை அழைப்பாளா? அழைத்தாள் என்ன ஆகும்? ஏன் அவளைப் பின் தொடர்கிறேன் எனக் கேட்டு திட்டுவாளா? திட்டினால் என்ன மறுமொழி கூற? நான் ஏன் அங்கிருந்து விரைந்தேன்? நின்று பேசி இருக்கலாமே? என பல எண்ணங்கள் குழம்பியிருந்த அவன் மனதை மேலும் குழப்பியது. வீட்டை அடையும் வரை அவன் மனம் அதில் எழுந்த சிந்தனைகளோடு சற்று முன் கரையோடு மோதிக்கொண்டிருந்த அலைகளைப்போல மோதிக்கொண்டிருந்தது.

Tamil Short Story – Third Prize

சௌந்தரராஜன் ஜீவா (Soundrarajan Jeeva)

தனிமை (Lonesome)

வீட்டுக்குள் சென்றதும் சாய்வு நாற்காலியில் சாய்ந்தான். தன் கைப்பேசியைப் பார்த்தான்... பார்த்துக்கொண்டிருந்தான்... பார்த்துக்கொண்டேயிருந்தான். அவளுக்கு குறுந்தகவல் அனுப்பலாமா என தனக்குள் கேட்டான். ஆனால் என்னவென்று அனுப்ப? அவள் அவனைப் பார்த்தாளா இல்லையா என்று கூட தெரியாமல் என்னவென்று அனுப்புவது. சிந்தித்துக்கொண்டே அவன் கண்கள் சோர்வினால் சுயமாகவே மூடின. எவ்வளவு நேரம் தூங்கினான் என்றே தெரியவில்லை. எழுந்து பார்த்தபோது வீடு இருளில் இருந்தது. நேரம் அறிய கைப்பேசியை எடுத்தான். முன்புறத்தில் ஒரு குறுந்தகவல்...

“Hi…”

*** முற்றும் ***

(1733)